DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 193/2026

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | வெண்ணிலா |
| Father / Husband Name | சாந்தகுமார் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 16.06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிலாவட்டம் கிராமத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். 27.10.2025 ம் தேதி காலை 7.30 மணியளவில் நானும் என் கணவரும் இருசக்கர வாகனத்தில் வேலைக்கு செல்லும்போது சிலாவட்டம் பேருந்து நிறுதத்தில் என்னை உட்கார வைத்துவிட்டு ஒழுப்பாக்கம் பெட்ரோல் பங்கில் அவருடைய இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போடுவதற்காக சென்னை to மேல்மருவத்தூர் திசையில் சென்றார். சிலாவட்டம் வாராபதி அருகே செல்லும்போது அப்போது என் கணவர் இருசக்கர வாகனத்திற்கு பின்னால் வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டது. என் கணவர் கத்தும் சத்தம் கேட்டு நான் ஓடி சென்று பார்த்தபோது என் கணவர் அடிபட்டு குப்புற கிடந்தார். அவருக்கு நெஞ்சு பகுதியில் அடிபட்டிருந்தது.

2. நான் உடனடியாக அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். ஆஜர் எதிரிதான் அந்த காரை ஓட்டி விபத்தை ஏற்படுத்திய நபர். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3. போலிசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் ஏதாவது பதிவு செய்தார்களா என்றால் அந்த நேரத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை. சத்தம் கேட்டு தான் நான் ஓடிப்போய் பார்த்தேன் என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து என்னை என் வீட்டிற்கு தான் அழைத்துச்சென்றார்கள் என்றால் சரிதான். நான் வேறு எங்கும் செல்லவில்லை என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார் என்றால் என் வழக்கறிஞர் எழுதினார். விபத்து நடந்தபோது நான் விபத்தை ஏற்படுத்திய நபரை பார்க்கவில்லை என்றால் சரியல்ல பார்த்தேன். விபத்து நடந்த பகுதி தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். அந்த பகுதியில் தார் சாலை மேடாகவும், மண்

பாதை சற்று பள்ளமாகவும் இருக்கும் என்றால் சரிதான். சிலாவட்டடத்தில் இருந்து வரும்போது மண் பாதையில் இருந்துதான் ரோட்டின் மேல் ஏறவேண்டும் என்றால் சரியல்ல. என் கணவர் பெட்ரோல் போட செல்லும்போது மண் பாதையில் இருந்து மேலே ஏறும்போது சறுக்கி விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோன என் கணவருக்கு இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 193/2026

Miscellaneous :

Sessions : PW 2

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | வினோத்குமார் |
| Father / Husband Name | சாந்தகுமார் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 16.06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிலாவட்டம் கிராமத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். 27.10.2025 ம் தேதி காலை 7.30 மணியளவில் என் அப்பா என் அம்மாவை இருசக்கர வாகனத்தில் கொண்டு சென்று சிலாவட்டம் பேருந்து நிறுத்தத்தில் இறக்கிவிட்டு ஒழுப்பாக்த்திற்கு இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போட சென்றார். அப்போது சென்னையில் இருந்து திண்டிவனம் நோக்கி சென்ற யுனோவா கார் என் தந்தையின் இருசக்கர வாகனத்தின் பின் பக்கம் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு போன் மூலம் தகவல் வந்தது. நான் உடனடியாக சம்பவயிடம் சென்று அடிபட்ட என் அப்பா 108 ஆம்புலன்ஸ் மூலம் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் என் அப்பா இறந்துவிட்டதாக சொன்னார்கள். என் அப்பாவின் பிரேதத்தின் மீது போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் பதிவு செய்தார்கள். என்னுடைய முதல் விசாரணையில் சொன்ன தகவலை தான் போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோனவர் என்னுடைய அப்பா என்பதால் என்னுடைய அம்மா கொடுத்த தவறான புகாருக்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 193/2026

Miscellaneous :

Sessions : PW 3

**எதிரி ஆஜர்**

| Name | பிரசன்னகுமார் |
|---|---|
| Father / Husband Name | அரவிந்தன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 16.06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது போந்தூரில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். சாட்சி ஆறுமுகம் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள அசா3 ன் முதலாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 27.10.2025 ம் தேதி காலை 7.00 மணிக்கு என் மாமா இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் போட சென்றபோது சென்னையில் இருந்து திண்டிவனம் நோக்கி சென்ற கார் மோதி விபத்து ஏற்பட்ட இடத்தை பார்ப்பதற்காக அன்று காலை 10.00 மணியளவில் சிலாவட்டம் பேருந்து நிறுத்தத்திற்கு நானும் ஆறுமுகம் என்பவரும் சென்றோம். அப்போது போலிசார் சம்பவயிடத்தில் விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் ஆறுமுகம் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்தில் இறந்த நபர் என்னுடைய மாமா என்றால் சரிதான். என்னுடன் கையொப்பம் செய்த ஆறுமுகம் என்பவர் என்னுடைய உறவினர் என்றால் இல்லை, இறந்துபோன என் மாமாவின் உறவினர். நான் கையொப்பம் போட்ட ஆவணத்தில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் விபத்து நடந்ததை பற்றி எழுதியிருந்தார்கள். கையொப்பம் போட்ட ஆவணத்தில் என்ன குறிப்பிட்டு எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் விபத்தை பற்றி தான் எழுதியிருந்தது. இறந்துபோன நபரின் உடலை வாங்குவதற்காக காவல் நிலையம் சென்று கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. விபத்தில் இறந்துபோனவர் என்னுடைய மாமா என்பதால் என்னுடைய அத்தை கொடுத்த தவறான புகாருக்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 193/2026

Miscellaneous :

Sessions : PW 4

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஆறுமுகம் |
| Father / Husband Name | பெருமாள் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 16.06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிலாவட்டத்தில் வசித்து பீரோ கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். சாட்சி பிரசன்னகுமார் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள அசா4ன் இரண்டாவது கையொப்பம் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 27.10.2025 ம் தேதி காலை 7.00 மணிக்கு என் மாமா இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் போட சென்றபோது மதுராந்தகத்தில் இருந்து திண்டிவனம் நோக்கி சென்ற கார் மோதி விபத்து ஏற்பட்ட இடத்தை பார்ப்பதற்காக அன்று காலை 10.00 மணியளவில் சிலாவட்டம் பேருந்து நிறுத்தத்திற்கு நானும் பிரசன்னகுமார் என்பவரும் சென்றோம். அப்போது போலிசார் சம்பவயிடத்தில் விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் பிரசன்னகுமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்தில் இறந்த நபர் என்னுடைய மாமா என்றால் தூரத்து முறையில் மாமா என்னை போலிசார் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். அங்கு நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் போட்ட ஆவணத்தில் என்ன குறிப்பிட்டு எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் நேரம், அவரது மனைவி பெயர், உறவு பற்றி எழுதியிருந்தது. பிரசன்ன குமார் என் மாமாவின் உறவினர் என்றால் சரிதான்.